# சிந்து நதி நீர் ஒப்பந்தம் தொடர்பான நடுநிலை நிபுணர்களின் கூட்டம்

செப்டம்பர் 21, 2023

வியன்னாவில் உள்ள நிரந்தர நடுவர் நீதிமன்றத்தில் 2023 செப்டம்பர் 20 மற்றும் 21 ஆகிய தேதிகளில் கிஷன்கங்கா மற்றும் ரேட்லே விவகாரத்தில் நடுநிலை நிபுணர்களின் கூட்டத்தில், நீர்வளத் துறைச் செயலர் தலைமையில் இந்தியாவிலிருந்து பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். மூத்த வழக்கறிஞர் திரு ஹரிஷ் சால்வே கேசி இந்த விவகாரத்தில் இந்திய தலைமை ஆலோசகர் பதவியில் உள்ளார்.

சிந்து நதி நீர் ஒப்பந்தத்தின் கீழ் இந்தியாவின் கோரிக்கையின் பேரில் நியமிக்கப்பட்ட நடுநிலை நிபுணரால் கூட்டப்பட்ட இந்த கூட்டத்தில் இந்தியா மற்றும் பாகிஸ்தானின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் இந்தியாவின் பங்கேற்பானது, சிந்து நதி நீர் ஒப்பந்தத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள நடைமுறையின்படி, இந்த நேரத்தில் நடுநிலை நிபுணர் நடவடிக்கைகள் மட்டுமே செல்லுபடியாகும் நடவடிக்கையாகும் என்ற இந்தியாவின் நிலையான, கொள்கை ரீதியான நிலைப்பாட்டிற்கு ஏற்ப உள்ளது.

இந்த காரணத்திற்காகவே, கிஷன்கங்கா மற்றும்ரேட்லே திட்டங்கள் தொடர்பான அதே பிரச்சினைகளில், சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட நடுவர் நீதிமன்றத்தால் நடத்தப்படும் இணையான நடவடிக்கைகளில் பங்கேற்க வேண்டாம் என்ற ஒப்பந்தப்படி நிலையான முடிவை இந்தியா எடுத்துள்ளது.

நடுநிலை நிபுணர் நடவடிக்கைகள் நடந்துகொண்டிருக்கின்றன. இது மேலும் சில காலம் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சிந்து நதி நீர் ஒப்பந்தத்தின் விதிகளின்படி பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஆதரவளிக்கும் விதத்தில் ஈடுபட இந்தியா உறுதிபூண்டுள்ளது.

**புது தில்லி**
**செப்டம்பர் 21, 2023**